# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009
## HELD IN AUGUST – 2009

## ECS 2.12 – ECONOMIC HISTORY OF SRI LANKA

எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "இலங்கையின் பண்டையப் பொருளாதாரத்தின் இயல்பானது, நீர்ப்பாசன நாகரீகத்துடன் பிணைந்துள்ளது." ஏற்றுக் கொள்வீரா? விளக்குக.

(20 புள்ளிகள்)

02. அ) பெருந்தோட்ட விவசாய கட்டமைப்பினைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ) பெருந்தோட்டத்தில் கூலிகளாக இலங்கையர் ஏன் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை?

(05 புள்ளிகள்)

இ) பெருந்தோட்டக் கூலிகளாக இந்தியத் தமிழர்களின் வருகையின் விளைவுகளை பட்டியலிடுக.

(10 புள்ளிகள்)

03. இலங்கையின் வீதியமைப்பு முறையில் ஆங்கிலேயர் காட்டிய ஆர்வத்தையும், அபிவிருத்தியையும் விளக்கிக் கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

04. "இலங்கையின் இரயில்வேயை ஆங்கிலேயர் அமைத்தபோது, அது பெருந்தோட்டத்தை மையப்படுத்தியே இருந்தது."

அ) இலங்கையின் ஆரம்பகால இரயில் போக்குவரத்துக்கும் பெருந்தோட்டத்திற்கும் உள்ள தொடர்பு எத்தகையது என விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) இலங்கையின் போக்குவரத்து தொடர்பாடல் விருத்திக்கு இரயில்வே போக்குவரத்து எவ்விதமான பங்களிப்பை வழங்கியிருந்தது எனக் காட்டுக.

(10 புள்ளிகள்)

05. "இலங்கையின் கோப்பிப் பயிர்ச் செய்கையுடன் ஒப்பிடுகையில் இறப்பர் மற்றும் தெங்கு பயிரிடலில் இலங்கையரின் பங்கு அதிகம்" ஏற்றுக் கொள்வீரா? விளக்குக.

(20 புள்ளிகள்)

06. இலங்யையின் பண்டைய சமூகக் கட்டமைப்பை மாற்றியமைத்த வகையில், கோல்புறூக் - கமறன் சீர்திருத்தத்தின் பங்கினை மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

07. சுதந்திரத்துக்குப் பிற்பட்ட கால இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றத்தை, நீர் எவ்வாறு நோக்குகின்றீர்? உமது விடையை ஆதாரபூர்வமாக முன்வைக்குக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு (02)** விளக்கக் குறிப்புக்கள் தருக.

அ) சூரியமல் இயக்கம்
ஆ) இரட்டைப் பொருளாதாரம்
இ) கறுவாத் தனியுரிமை

(தலா 10 புள்ளிகள்)

*****